Dr.G.S.KALYANASUNDARAM MEMORIAL SCHOOL

CHOZHAN MALIGAI, KUMBAKONAM

# NEWSLETTER

## AUGUST 2024

ISSUE - 4



*Excellence is not a singular act but a habit*

SHRI G.K.RAMAMURTHY

Chairman - GKR Foundation

# SAFAL EXAM

The SAFAL (Structured Assessment for Analysing Learning) examination was organized between July 22nd and August 6th, 2024, to assess the competency of Grade 8 and Grade 5 students in Mathematics, Science, and English. The examination was conducted in four batches, each with 40 students. It employed a multiple-choice format to encourage critical and analytical thinking. The process was supervised by Mr Paramaguru, Vice-principal and coordinated by Nodal Officer Ms Sivagami,overall coordination by Ms.Anusha. The examination ran smoothly with careful coordination from the staff. The SAFAL examination has proven to be an effective tool for evaluating students' learning outcomes and competencies, establishing a strong foundation for their future academic progress.



ஜூலை 22 முதல் ஆகஸ்ட் 6 வரை மாணவர் கற்றலை, பகுப்பாய்வு செய்வதற்கான கட்டமைக்கப்பட்ட (SAFAL) தேர்வு முறை நடத்தப்பட்டது. இத்தேர்வு மையக் கண்காணிப்பாளராகப் பள்ளியின் துணை முதல்வர் திரு.பரமகுரு, தலைமை கண்காணிப்பு அதிகாரி (NODAL OFFICER) திருமதி.சிவகாமி, பள்ளியின் சிபிஎஸ்இ ஒருங்கிணைப்பாளர் திருமதி.அனுஷா, தேர்வுக் கண்காணிப்பாளார்கள் திரு.சேதுராமன், திருமதி.கமலப்பிரியா, திருமதி.நிர்மல்பாரதி, திருமதி.சுகன்யா ஆகியோரின் மேற்பார்வையில் இத்தேர்வு நடைபெற்றது. NEP 2020, மாணவர்களின் வளர்ச்சியை ஊக்குவிக்கவும், திறமை அடிப்படையிலான கற்றலுக்கு வழிகோலவும், 6 மற்றும் 9 ஆம் வகுப்பு மாணவர்களுக்குக் கொள்குறி வகையிலான அடிப்படையில் வினாக்கள் அளிக்கப்பட்டு, அத்தேர்வின் மூலம் மாணவர்களின் நுண்ணிலைத்திறன்கள், சிந்தனைத்திறன்கள் போன்றவை சோதித்தறியப்பட்டது. இதன் மூலம் திறன் அடிப்படையிலான கல்வியை நோக்கி மாணவர்களின் முன்னேற்றம் அமைகிறது என்றால் அது மிகையல்ல.

# NCC SELECTION

Under the well-organized leadership of the NCC Officer, Mr Venkat Kumar, students' selection for the NCC was held on July 24, 2024. It was Havildar Srinivasa Rao who oversaw the selection procedure. 42 students from eighth grade participated in the selection process. After a thorough scrutiny, twenty-five were selected for the NCC program. Later, four more students were preferred to be reserves, bringing the total to 29. Before final confirmation, the parents of the selected pupils should submit willingness letters to guarantee their support and commitment. The chosen pupils are eager to begin their NCC training and activities. Ultimately, the training will improve their self-control, leadership abilities, and sense of responsibility.



# NCC SELECTION



பள்ளியில் ஜூலை 24 2024 அன்று தேசிய மாணவர் படைக்கு மாணவர்களைத் தேர்வு செய்யும் முகமை நடைபெற்றது. மாணவர்களைத் தேர்வு செய்வதற்காக ஸ்ரீநிவாச ராவ் அவர்கள் வருகை புரிந்தார். இதில் எட்டாம் வகுப்பு மாணவர்களில் 42 மாணவர்கள் உடல்தகுதித் தேர்வு, மற்றும் திறனறித்தேர்வின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களில் 29 மாணவர்கள் இறுதித் தேர்வில் தேர்வு செய்யப்பட்டனர். பள்ளிகளில்தேசிய மாணவர்படை என்ற அமைப்பானது, பள்ளிப்பருவத்திலேயே மாணவர்களிடையே நாட்டுப்பற்று, அர்ப்பணிப்பு, ஒழுக்கம், நன்னடத்தை போன்ற நற்பண்புகளைக் கற்பித்து சிறந்த குடிமகன்களை உருவாக்குகிறது. அவ்வகையில் நம் பள்ளியானது மாணவர்களை ஒவ்வொரு ஆண்டும் தேசிய மாணவர் படைக்குத் தேர்வு செய்து பயிற்சி அளித்து வருகிறது. நம் பள்ளியின் தேசிய மாணவர்படையின் பயிற்சி ஆசிரியர் திரு.வெங்கட்குமார் அவர்கள் மாணவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து இப்பயிற்சி முகமையைத் திறம்பட நடத்தி வருகிறார்.

# RDC PARADE SELECTION

On August 16, 2024, 22 NCC cadets from Dr. G.S.K Memorial School participated in the RDC Parade selection, held at Town High School, Kumbakonam. The selection process included drill and cultural events, with cadets competing for a spot in the second-level selection. Out of the 22 participants, 11 cadets were selected for the next level of the competition. Among them, four cadets are for Drill Event with Communication and seven cadets for Cultural Events. Furthermore, 11 cadets who got selected in the first level of RDC parade selection have completed the firing Test at Annai College, Kumbakonam. The selected cadets will undergo further training under the guidance of our teachers to enhance their skills and prepare for the upcoming stages of the competition.






# RDC PARADE SELECTION


Ashvita.C
Classical dance


Tejaswini P
Classical dance


Balaeeswari .Maha
Keyboard


Vijayakuzhalini.S
Dance


Akshara P
Drill


Nikitashree.V
Drill


Gowshik.B
Drill


Hrushikesh.T.M
Drill


Ashwin .S
Silambam


Prajith.R
Silambam


Rajith A
Electric pad







ஆகஸ்ட் 16 2024 அன்று, ஜனவரி 26 டெல்லியில் நடைபெறவிருக்கும் குடியரசு தின விழா அணிவகுப்பில் கலந்து கொள்வதற்கான பயிற்சித் தேர்வில் நம் பள்ளியில் இருந்து 24 தேசிய மாணவர் படை மாணவர்கள் சென்றிருந்தனர். முதல் சுற்றில் வெற்றிபெற்று 11 மாணவர்கள் இரண்டாம் தகுதிச் சுற்றுக்குத் தேர்வாகியுள்ளனர். நம் பள்ளியின் தேசிய மாணவர்படையின் பயிற்சி ஆசிரியர் திரு.வெங்கட்குமார் அவர்கள் சிறந்த பயிற்சிகளை வழங்கி அம்மாணவர்களுக்கு ஒரு வழிகாட்டியாகத் திகழ்கிறார்.

# SPELL BEE

Our school proudly hosted the regional level of the India Spelling Bee competition in our advanced computer lab on July 25, 2024. Students who excelled at the school level attended the highly competitive regional-level India spelling bee competition. At the outset, the computer lab was well organized and guaranteed a smooth and significant spelling bee competition. In addition, the dedicated efforts of our school's staff, including teachers and volunteers, were instrumental in organizing and managing the event. Moreover, the state-of-the-art facilities at our computer lab significantly enhanced the efficiency of the competition. The India Spelling Bee Contest (2023-2024) for Grades 1-9 had a great turnout from Dr.GSK Memorial School. Around 438 students (excluding staff children) registered for the competition to showcase their spelling skills and determination. Out of these participants, 40 students qualified and advanced to the next round of the contest. The online regional-level test took place at the school on 25.07.2024. The school proudly announces that in Group 5, Ms Devisree from Dr GSK secured the 13th rank, in group4 Ms.Mahalakshmi secured rank19, highlighting their excellence and determination in the competition. She was honoured on August 13, 2024, in the special assembly. The school congratulates all the qualifiers and wishes them continued success in the upcoming rounds.



2023-24 ஆம்ஆண்டுக்கான SPELLING BEE போட்டிகளில் நம்பள்ளி சார்பாக 438 மாணவர்கள் பதிவு செய்தனர். 25.07.2024 அன்று இணையம் வழியாக நடந்த தேர்வில் சுமார் 40 மாணவர்கள் பள்ளி அளவில் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்கள் மண்டல அளவிலான போட்டியில் பங்கேற்றனர். அவர்களில் செல்வி தேவிஸ்ரீ 5ஆவது சுற்றில் தரவரிசைப்பட்டியலில் 13 ஆவது இடமும், செல்வி.மகாலெட்சுமி 4ஆவது சுற்றில் தரவரிசைப்பட்டியலில் 19ஆவது இடமும் பெற்று பள்ளிக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

# SPLASH 2024

On 27th July 2024, a vibrant team of 84 students from Dr. G.S.K School participated in the prestigious inter-cultural fest "Splash 24" held at Blossom Public School, Tanjore. This event was an exciting platform for showcasing diverse talents across various categories such as Art, Rangoli, Music, Dance, Tamil Elocution, English Elocution, Spell Bee, Quiz, Science Project, and Abhinaya Nadagam. Our students displayed exceptional skills and creativity by securing prizes in several categories: Music: 3rd Place, Dance: 1st Place, Tamil Elocution: 1st Place, and Tamil Abhinaya Nadagam: 2nd Place. In addition, Dr GSK Memorial School also received a special prize for overall participation. The event provided a competitive arena, fostering cultural exchange and holistic development.



















ஜூலை 27 2024 அன்று அனைத்துப் பள்ளிகளுக்கு இடையேயான கலை, இலக்கிய போட்டிகளைத் தஞ்சை ப்லாசம் பப்ளிக் பள்ளி ( Bloosam Public school) ஏற்று நடத்தியது. இப்போட்டியில் 25 பள்ளிகளிலிருந்து 1065, மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர். பேச்சுப்போட்டி, அபிநய நாடகம், ஓவியம், நடனம், வினாடிவினா, போன்ற பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன. தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் போட்டிகள் நடத்தப்பட்டது. நம் பள்ளியிலிருந்து 85 மாணவ, மாணவிகள் இப்போட்டியில் பங்கேற்றனர். அதில் இசைப்போட்டியில் செல்வன்.சாய் கிருஷ்ணா மூன்றாம் பரிசும், நடனப்போட்டியில் செல்வி.சனா முதல் பரிசும், தமிழ் பேச்சுப்போட்டியில் செல்வி.தேவசேனா முதல்பரிசும், அபிநய நாடகப் போட்டியில் செல்வி.ஜோத்ஸ்னா, செல்வி.அமிர்தவர்ஷினி, செல்வி.சுவேதா, செல்வி.கயல்விழி, செல்வி.சாருஹாசினி, செல்வன்.நித்திஷ், செல்வன்.சபரிநாத் ஆகியோர் இரண்டாம் பரிசுகள் பெற்று பள்ளிக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

# GURU PICTURE- MEMORABLE GIFT

Dr. G.S.K Memorial School is delighted to acknowledge the generous contribution made by Mrs Hema, the mother of Master Sivaganesh from Grade V, and Ms.Shivanya Grade IIA she presented a beautiful portrait of the Guru to our school, and our school is thankful for this gracious gift. The Guru's portrait embodies wisdom, guidance, and inspiration, qualities we aim to instil in our students. It will undoubtedly serve as a source of motivation for students and staff. The institution extends its gratitude to Mrs. Hema for her gesture.




நம் பள்ளி மாணவர்கள் செல்வன் சிவகணேஷ் VA செல்வி ஷிவாத்மிகா IIA இவர்களின் தாயார் திருமதி.ஹேமா அவர்கள் மாணவர்களுக்கு குருவின் மதிப்பை உணர்த்தும் வண்ணம் மாணவர்கள் சார்பில் ஓர் அழகான குருவின் புகைப்படத்தை நம் பள்ளிக்கு வழங்கினார். இந்நிகழ்வானது, பெற்றோர், நம் பள்ளியின் மீது கொண்டுள்ள அன்பை வெளிப்படுத்துவதாக அமைந்தது.

# INTER-SCHOOL DANCE COMPETITION AT THANJAVUR

On July 19, 2024, the National Temples Federation held an inter-school dance competition at Thanjavur, where 16 students from our school participated. Each student performed a solo dance, showcasing their unique skills and creativity. The team was led by our dance teacher, Ms. Hemalatha, and music teacher, Ms. Madhumitha. Ms. Jeevitha, a Grade XI student, won the 3rd prize in her category, earning a cash award of Rs. 3000/-. Ms. Sakthibagavathi of grade X, and Master Lakshavidhyabaran of grade IX also won 3rd prizes in their respective categories with a cash prize of Rs. 3000/- each. The competition was an ample opportunity for students to showcase their talents and gain valuable experience. The achievements of these students are a testament to their hard work and the excellent training provided by our teachers.






ஜூலை 19 2024 அன்று தஞ்சையில் தேசிய கோயில்களின் கூட்டமைப்பு இணைந்து நடத்திய மாவட்ட அளவிலான பரதநாட்டிய போட்டியில் நம் பள்ளியில் இருந்து 16 மாணவர்கள் கலந்து கொண்டனர். அவர்களில் செல்வி. ஜீவிதா, செல்வி. சக்திபகவதி மற்றும் செல்வன்.லக்ஷவித்யாபரண் ஆகியோர் மூன்றாம் பரிசு பெற்று தலா 3000 ரூபாய் பணமுடிப்புப் பெற்று நம் பள்ளிக்குப் பெருமை சேர்த்துள்ளனர். அனைத்து மாணவர்களும் மிகச் சிறப்பாக நடனமாடி தம் திறன்களை வெளிப்படுத்தினர். இது மாணவர்களின் ஒருங்கிணைந்த கலைத்திறனை மேம்படுத்துவதாக அமைந்துள்ளது.

# POEM RECITATION

On July 31, 2024, Grade 1 and Grade 2 students participated in the final round of the Poem Recitation competition, showcasing their creativity and confidence in poetry. The Grade 2 Poem Recitation was judged by Ms.N.Rekha, Assistant Head of the Department of English, and Ms.K.Iswarya Nandhini, Parent of K.Sakshi of III B, while the Grade 1 Poem Recitation was judged by Ms Ramya, Department of English, and Ms.T.L.Nandhini, parent of Mayurha-V A & Pranav Chakravarthi -VI A. The students participated in a competition for their poems, showcasing their clarity and expression. The judges praised their understanding of themes and emotional conveying. The event helped develop public speaking skills and confidence, highlighting the students' literary talents. The judges provided valuable feedback and congratulated the participants for their commendable performances.



ஜூலை 31 2024 அன்று, 1 மற்றும் 2 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு ஒப்புவித்தல் போட்டியனது (POEM RECITATION) ஆங்கிலத்துறையின் சார்பில் நடத்தப்பட்டது. இப்போட்டியின் நடுவர்களாக மாணவி மயூரா IIIA, பிரணவ் சக்ரவர்த்தியின் VI தாயார் திருமதி.நந்தினி மற்றும் ஆங்கில ஆசிரியர்களான திருமதி.ரேகா, திருமதி.ரம்யா ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களின் மனனம், உச்சரிப்பு போன்ற திறன்களை சோதித்தறிந்து மதிப்பீடு செய்தனர்.

# HONOURING THE TOPPERS UT-1

On August 2, 2024, a special assembly was held at Dr GSK Memorial School to honour the students of Grades I through XII who achieved the top three positions in the I Unit Test. The occasion honoured these students' diligence, commitment, and academic achievement. Each student was recognized and awarded certificates during the assembly. The school community applauded their achievements, encouraging the spirit of healthy competition and motivating others to strive for excellence in their studies.




ஆகஸ்ட் 2 2024 அன்று 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை, முதல் அலகுத் தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பிடித்த மாணவர்கள் பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வானது மாணவர்களை ஊக்குவிக்கும் வகையிலும், மேலும் இதுபோன்று பல மாணவர்கள் உருவாக ஒரு வாய்ப்பாகவும் அமைந்தது.

# DANCE PERFORMANCE AT ADHI KUMBESHWARAR TEMPLE

On August 2, 2024, 15 students of our school performed a captivating dance at Adhi Kumbeshwarar Temple, Kumbakonam, under the guidance of dance teacher Ms.Hemalatha. The event was expertly coordinated by Ms.Bhavani, Head of the Art Academy, and Ms.Umamaheswari, ensuring a seamless and memorable experience for all attendees. The Temple Committee members honoured the students with certificates and shawls, recognizing their dedication and hard work in dance. This gesture of appreciation celebrated the students' achievements and encouraged their continued passion for the performing arts.





ஆகஸ்ட் 2 2024 அன்று ஆடி வெள்ளிக்கிழமையை முன்னிட்டு ஆதிகும்பேஸ்வர சுவாமி திருக்கோயிலில் நம் பள்ளி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைப்பெற்றது. இக்கலைநிகழ்ச்சியில் நம் பள்ளியிலிருந்து 20 பரதநாட்டிய மாணவர்கள் பங்கேற்றனர். தனிநடனம், குழுநடனம் என்று பல பிரிவுகளில் அழகுற ஆடினர்.. பார்வையாளர்களின் கண்ணுக்கும், கருத்துக்கும் விருந்தளித்து அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்தனர். நம்பள்ளியின் நடன ஆசிரியர் செல்வி ஹேமலதா அவர்கள் மாணவர்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து நடனக்கலையைச் சிறப்பாகக் கற்பித்து வருகிறார். கோயில் நிர்வாகத்தினர் பேசும்போது GSK பள்ளியானது கல்வியில் மட்டுமல்ல, கலைக்கும் முக்கியத்துவம் அளிக்கும் ஒரு கோயிலாகத் திகழ்கிறது என்று பெருமைப்படுத்திக் கூறினர். விழா நிறைவில் கோயில் நிர்வாகத்தினர், நம்பள்ளியின் நடன ஆசிரியர் செல்வி ஹேமலதா, மனிதநேயத்துறைத் தலைவர் திரு.ஐயப்பன், கலைத்துறைத் தலைவர் திருமதி.பவானி, நூலகர் திருமதி. உமாமகேஸ்வரி மற்றும் நம் பள்ளியின் அனைத்து இசைக்கலைஞர்களையும் பாராட்டி பொன்னாடை போர்த்தி மரியாதை செய்தனர்.

# PARENT-TEACHER MEETING

On August 3, 2024, a parent-teacher meeting was held for kindergarten to grade 12 students. The meeting was extended due to a large turnout, allowing parents to engage with teachers and discuss their child's academic standing. Teachers shared detailed reports on recent unit tests, and parents had the opportunity to discuss their child's progress, address concerns, and receive feedback directly from the teachers. The parents' engagement and support are greatly appreciated.



ஆகஸ்ட் 3 2024 அன்று பெற்றோர் ஆசிரியர் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. பள்ளியில் குழந்தையின் முன்னேற்றத்தைப் பற்றி விவாதிக்கவும், கல்வி மற்றும் மாணவர் வளர்ச்சிக்கான தீர்வுகளைக் கண்டறியவும் இப்பெற்றோர் ஆசிரியர் கலந்தாய்வுக் கூட்டம் உறுதுணையாக அமைந்தது.. திறனறி அட்டைகள் மூலம் தனிப்பட்ட பாடங்களில் மாணவர்களின் கல்வி வளர்ச்சி மற்றும் திறன் வளர்ச்சியில் கவனம் செலுத்துதல், மாணவனை நெறிப்படுத்துதல் குறித்த தகவல் பரிமாற்றம் மாணவனின் பெற்றோர் ஆசிரியரிடையே நிகழ்ந்தது.. இந்நிகழ்வானது, பெற்றோரிடையே தம் குழந்தைகள் மீது அதிக பொறுப்பையும், ஈடுபாட்டையும் மேற்கொள்ள அவர்களை ஊக்குவிக்கும் ஒரு காரணியாக அமைந்தது.

# BOOK FAIR

Dr.G.S.K. Memorial School organized a vibrant Book Fair from August 7, 2024, to August 9, 2024. The book fair was inaugurated by Mr.Senthil Kumar, Parent of Master.Krishkarthikeyan along with a few parents.The fair aims to promote a love for reading among students. The event featured an extensive collection of books from Scholastic Publications, catering to a wide range of reading levels from KG to Grade 12. The fair offered students many options, from storybooks to educational materials. Students enthusiastically visited the fair and purchased books of their choice and interest, further fuelling their passion for reading and broadening their literary horizons.




நம் பள்ளியில் ஆகஸ்ட் 7 முதல் 9 வரை மூன்று நாட்கள் புத்தகத்திருவிழா நடைபெற்றது. இவ்விழாவை 9B மாணவன்.கிருஷ்கார்த்திகேயனின் தந்தை திரு.செந்தில்குமார் அவர்களுடன், மேலும் சில பெற்றோர்கள் இணைந்து துவக்கி வைத்தனர். "புத்தகம் காலத்தின் விதை நெல்" என்பதற்கேற்ப மாணவப்பருவத்திலேயே வாசிக்கும் திறனை மேம்படுத்தும்வகையில் நம் பள்ளியானது இப்புத்தகத் திருவிழாவை ஏற்பாடு செய்திருந்தது. பல்வேறு புத்தக அரங்குகளும், அதில் மாணவர்களுக்கு ஏற்ற வகையில் வகைவகையான வண்ணப் புத்தகங்களும் கண்ணுக்கும், கருத்துக்கும் விருந்தளிக்கும் வகையில் அமைந்திருந்தது.

# RHYTHM N RHYME

The English Rhyme 'N' Rhythm Competition was held at Dr. G.S.K. Memorial School for LKG and UKG students, with preliminary rounds on August 8 and finals on August 9. The judges were Ms S.G. Kavitha, Dept. of English and Ms C. Suhashini, parent of C.M.Kirthick from Grade III-A, for LKG students, and Ms. S.G. Kavitha, Dept. of English and Ms.C.Vishnupriya, parent of C. Syona from Grade IV B, and C.Sanjiv Ram from Grade II-A, for UKG students. The competition aimed to foster language development and boost confidence among young students. The students showcased their recitation skills, impressing judges and the audience with their rhythm, pronunciation, and stage presence. The top performers from the preliminary rounds received positive feedback and constructive encouragement from the judges.











ஆகஸ்ட் 8 2024 அன்று Rhythm N Rhyme பாட்டுப் போட்டியானது LKG மற்றும் UKG மாணவர்களுக்கு நடத்தப்பட்டது. வகுப்பு வாரியாக மாணவர்களுக்குப் பல்வேறு தலைப்புகள் கொடுக்கப்பட்டது. இப்போட்டியின் நடுவர்களாக ஆங்கில ஆசிரியர் திருமதி. S.G.கவிதா, மற்றும் செல்வி.சோனா IV B, செல்வன்.சஞ்ஜித்ராம் IIA ஆகியோரின் தாயார் திருமதி.விஷ்ணுப்ரியா அவர்கள் கலந்து கொண்டு சிறந்த மழலைக் குரலைத் தேர்ந்தெடுத்து அவர்களின், நினைவாற்றல், மெய்ப்பாடு மற்றும் குரல்வளம் போன்றவற்றை மதிப்பிட்டுத் தேர்வு செய்தனர்.

# ORIGAMI COMPETITION


There was an exciting "Origami" competition for the kids in Grades 3, 4, and 5 on July 11, 2024. Mr Mohan, the Art teacher and Ms Dhowtharwin, the parent of Nikariga, evaluated the students' performance. The judges considered the students' originality, accuracy, and overall presentation while choosing the finest origami artwork. The competition aimed to foster students' artistic and creative thinking skills by allowing them to learn the intricate and delicate art of paper folding.



ஜூலை 11 2024 அன்று 3முதல் 5 ஆம் வகுப்பு மாணவர்களுக்குக் காகிதத்தை மடித்தும், வளைத்தும் உருவங்கள் செய்யும் ஓரிகாமி(ORIGAMI) போட்டி நடத்தப்பட்டது. இப்போட்டிக்கு நடுவர்களாக ஓவிய ஆசிரியர் திரு.மோகன், மற்றும் நம் பள்ளியின் மாணவி நிகாரிகாவின் தாயார் தௌதார்வின் கலந்து கொண்டு சிறந்த காகித உருவங்களைத் தேர்ந்தெடுத்தனர். இப்போட்டியில் கற்பனை மற்றும் கைவினைத்திறன் மேம்பாட்டினை மதிப்பிட்டு மாணவர்களைத் தேர்ந்தெடுத்தனர். இப்போட்டி மாணவர்களின் ஒருங்கிணைந்த திறன் வளர்ச்சிக்கு உறுதுணை செய்கிறது.

# SMART HOUSE FOR ELDERLY PEOPLE

On August 8, 2024, Grade IX students Master Lakshavidhyabharan and Master S. Vishal presented the concept of an AI-induced smart home designed for senior citizens. The presentation highlighted the integration of AI technologies to improve safety and comfort for senior citizens. The students' innovative approach to using AI for elderly care was appreciated by the audience, including teachers and fellow students. The project emphasized the importance of using technology to improve the quality of life for older adults, showcasing a forward-thinking approach to technology support.




ஆகஸ்ட் 8 2024 அன்று நம் பள்ளி மாணவர்களான செல்வன்.லக்ஷவித்யாபரண் மற்றும் செல்வன்.விஷால் ஆகியோர் இணைந்து முதுமைக்காலத்தில் வயதானவர்களுக்கு செயற்கை நுண்ணறிவு நம் வீடுகளில் எத்தகு பாதுகாப்பை, அமைத்துத் தருகிறது என்பதனை ஒரு செயல்திட்டம் (PROJECT) வாயிலாக செய்துக்காட்டி அசத்தினர். இது மாணவர்கள் AI வாயிலாக புதுப்புது புதுமைகளைப் புகுத்தவும், தங்களை மேம்படுத்திக் கொள்ளவும் உதவுகிறது.

# A LECTURE BY MS. DHARINI

On August 9, 2024, Ms. Dharani Vignesh of the Department of English had the honour of being invited as the Chief Guest and Resource Person at Srimad Andavan Arts and Science College, Trichy, where she delivered a lecture on "The Intersection of Digital Dystopia and Digital Humanities in English Literature" to UG and PG students. The session sparked meaningful discussions on the role of digital technologies in literature, particularly within dystopian narratives and digital humanities. Following this, she presented the same lecture to teachers at Dr. G.S.K Memorial School as part of our Teacher Enrichment Programme, a best practice of our institution aimed at integrating modern digital themes into teaching.




நம் பள்ளியின் ஆங்கில ஆசிரியர் திருமதி. தாரணி விக்னேஷ் ஸ்ரீமத் ஆண்டவர் கலை அறிவியல் கல்லூரிக்குச் சிறப்பு விருந்தினராகவும் சிறப்பு விரிவுரையாளராகவும் அழைக்கப்பட்டு கவுரவிக்கப்பட்டார். The intersection of digital dystopia and digital humanities in English Literature என்ற தலைப்பில் இளங்கலை மற்றும் முதுகலை மாணவர்களுக்குச் சிறப்புரையாற்றினார்.இந்த அமர்வு இலக்கியத்தில் மின்னணுத் தொழில் நுட்பங்களின் பங்கினையும் அதன் வளர்ச்சியினையும் மாணவர்களுக்கு உணர்த்தும் வண்ணம் அமைந்திருந்தது. இவ்வமர்வு மின்னணு மற்றும் செயற்கை நுண்ணறிவின் வளர்ச்சி மனித குலத்திற்குத் தரும் நன்மைகளையும் தீமைகளையும் வெளிக்காட்டுவதாய் அமைந்தது. இதனைத் தொடர்ந்து நம் பள்ளியில் திருமதி. தாரணி விக்னேஷ் அனைத்து ஆசிரியர்களுக்கும் இந்த அமர்வினை சிறப்பான முறையில் நடத்தி ஆசிரியர்களின் கற்பிக்கும் திறன் மேலும் மேம்பட ஒரு காரணியாய் அமைந்தார் என்றால் அது மிகையாகாது

# DANCE PERFORMANCE AT PATEESWARAM

On 9 August 2024, 19 Bharatanatyam students from Dr. G.S.K Memorial School enchanted the audience with solo and group performances at a cultural event at Durgai Amman Temple, Patteswaram. The students, trained by our dance teacher, Ms. Hemalatha, showcased their talent and grace, leaving the audience spellbound. The event organizers highly praised Dr G.S.K Memorial School for its emphasis on cultural activities alongside academics, recognizing the significance of a well-rounded education. At the end of the programme, Ms Hemalatha (Dance Teacher), Ms Bhavani (Head, Art Academy), Ms Umamaheshwari (Librarian), and the student dancers were honoured and felicitated with shawl and certificate in recognition of their efforts and contributions.




ஆகஸ்ட் 9 2024 அன்றுபட்டீச்சுரம் துர்க்கையம்மன் திருக்கோயிலில்நம் பள்ளிமாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் நடைப்பெற்றது. இக்கலை நிகழ்ச்சியில் நம்பள்ளியிலிருந்து 19 பரதநாட்டிய மாணவர்கள் பங்கேற்றனர். தனிநடனம், குழுநடனம் என்று பல பிரிவுகளில் அழகுறஆடினர்.. பார்வையாளர்களின் கண்ணுக்கும், கருத்துக்கும் விருந்தளித்து அனைவரையும் மெய்சிலிர்க்கவைத்தனர். நம்பள்ளியின் நடன ஆசிரியர் செல்விஹேமலதா அவர்களின் பயிற்சியில் மாணவர்கள் மிக அழகுற நடனம் ஆடினர். விழாநிறைவில் கோயில் நிர்வாகத்தினர் பேசும் போது ஜி.எஸ்.கே பள்ளி கல்விக்கு மடுமல்லாது கலைக்கும் முன்னுரிமை அளித்து கற்பித்து வருகிறது எனப் பாராட்டினார். நிறைவாக நம்பள்ளியின் நடனஆசிரியர் செல்விஹேமலதா கலைத்துறைத்தலைவர் திருமதி.பவானி, நூலகர்திருமதி. உமாமகேஸ்வரி மற்றும் நம் பள்ளியின் அனைத்து இசைக்கலைஞர்களையும் பாராட்டி பொன்னாடை போர்த்தி மரியாதை செய்தனர்.

# INLINE HOCKEY TOURNAMENT

Ms.Nikitha Shree of Grade IX B has made our school proud by securing the Silver Medal in the prestigious Inline Hockey Tournament hosted by the Roller Skating Federation of India (RSFI) on 13.08.2024. She represented Tamil Nadu and displayed remarkable skill and determination throughout the competition. In recognition of her outstanding performance, Ms.Nikitha was honoured during a special assembly at the school. The school community celebrated her success and eagerly awaited the official certification of her achievement. Her victory is an inspiration to the students, reflecting the importance of perseverance and dedication in sports.




ஆகஸ்ட் 13 2024 அன்று RSFI நடத்திய மாநில அளவிலான சறுக்கு விளையாட்டுப் (INLine HOCKRY SKATE) போட்டியில் நம் பள்ளி மாணவி நிக்கிதா ஸ்ரீ IX கலந்து கொண்டு தேசிய அளவில் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார். மாநில அளவிலான இப்போட்டியில் வெள்ளிப்பதக்கமும் சான்றிதழும் பெற்று நம் பள்ளிக்குப் பெருமை சேர்த்துள்ளார். அம்மாணவியை நம் பள்ளியின் இறைவழிபாட்டுக் கூட்டத்தில் அனைத்து ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் முன்னிலையில் துணைமுதல்வர்கள் கௌரவித்தனர்.

# DELTA MARATHON

During a special assembly held on August 12, 2024, the school recognized the outstanding achievements of Ms. Jeo Ponni of Grade XII, Ms. Joy Nila, and Ms. Santhoshini of Grade IX. These students participated in the 8km Cauvery Delta Youth Revival Marathon, showcasing their dedication and endurance.The marathon began at Darasuram and concluded at Idhaya College. Upon completion, all three students were awarded gold medals and certificates, acknowledging their exceptional effort and perseverance. The school community applauded their accomplishment, which is an excellent way to encourage other students to participate in fitness and community-oriented events.



ஆகஸ்ட் 12 2024 அன்று குடந்தை இதயா மகளிர் கல்லூரியின் பொன்விழா ஆண்டை முன்னிட்டு காவிரி டெல்டா இளையோர் எழுச்சி மாரத்தான் போட்டி நடைபெற்றது. இப்போட்டியில் நம் பள்ளியிலிருந்து பல மாணவர்கள் கலந்து கொண்டனர். அவர்களில் நம் பள்ளி மாணவிகள் செல்வி.ஜியோபொன்னி XII, செல்வி.ஜாய் நிலா X, செல்வி.சந்தோஷினி IX ஆகியோர் 8 கி.மீ தூரம் கடந்து, தங்கப்பதக்கம் மற்றும் சான்றிதழ்களைப் பெற்று நம் பள்ளிக்குப் பெருமை சேர்த்துள்ளனர். அம்மாணவர்களை நம் பள்ளியின் இறைவழிபாட்டுக் கூட்டத்தில் அனைத்து ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் முன்னிலையில் துணைமுதல்வர்கள் கௌரவித்தனர்.

# MASS ANTI DRUG PLEDGE

On August 12, 2024, students of Dr GSK Memorial School actively participated in the Mass Anti-Drug Pledge, a part of the "Drug-Free Tamil Nadu" program initiated by the government of Tamil Nadu.The event held online, saw enthusiastic participation from Grade XI students, who collectively took the anti-drug pledge at 10:30 AM in the school's Main Audio-Visual (AV) Hall. The pledge underscored the commitment to a drug-free life and the responsibility of fostering a healthier and safer society.The event reinforced the importance of creating awareness about the dangers of drug use among the younger generation, in alignment with the state's goal of eradicating drug abuse.







ஆகஸ்ட் 1 2024 அன்று தமிழ்நாடு அரசு உத்தரவின்படி, போதை ஒழிப்பு உறுதிமொழி நாளானது, நம் பள்ளியின் கலையரங்கத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பள்ளியின் துணைமுதல்வர் திரு.பரமகுரு மற்றும் 11 ஆம் வகுப்பு மாணவர்கள் அனைவரும் கலந்து கொண்டு இணையம் வழியாக உறுதிமொழி ஏற்றனர். மாணவர்களுக்குப் போதைப் பொருள்களின் தீமைகளையும் விளைவுகளையும் துணை முதல்வர்கள் எடுத்துரைத்தனர்.

# THIRUKKURAL COMPETITION

The Thirukkural Opuvithal competition was held on August 13, 2024, for Grade 1 and 2 students during their Tamil period under the supervision of their respective Tamil teachers. For Grade 1, recitation focused on "ஊக்கம் உடைமை", and for Grade 2, recitation focused on "ஒழுக்கம் உடைமை" in its entirety and the first five Kurals of "பண்புடைமை". The event saw enthusiastic participation from the students, showcasing their understanding and fluency in reciting the profound verses of the Thirukkural.



ஆகஸ்ட் 16 2024 அன்று 1 மற்றும் 2ஆம் வகுப்பு மாணவர்களுக்கு திருக்குறள் ஒப்புவித்தல் போட்டியும், 3,4,5 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு முறையே புதிய ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை போன்ற தலைப்புகளில் ஒப்புவித்தல் போட்டியும் நடைப்பெற்றது. இப்போட்டிக்கு மாணவர்கள் வள்ளுவரைப் போல், பாரதியைப் போல் வேடமணிந்து வந்து அழகுற பேசினர். இப்போட்டிக்கு நடுவர்களாக மாணவன்.சரவணவேலின் VI B தாயார் திருமதி.பத்மாவதி , மாணவன்.வேதகீதனின் VB தாயார் திருமதி.கமலா மற்றும் தமிழாசிரியர்களான திருமதி.மங்கையர்க்கரசி, திருமதி.மேகலா ஆகியோர் கலந்து கொண்டு மழலைகளின் மனனத்திறன், உச்சரிப்பு போன்ற திறன்களைச் சோதித்தறிந்து மதிப்பீடு செய்தனர்.

# INDEPENDENCE DAY

On August 15, 2024, Dr.G.S.K Memorial School celebrated the 78th Independence Day with enthusiasm and patriotism. The Chief Guest, Subedar Major Guruswamy, 8 (TN) BN NCC, Kumbakonam, was welcomed with a grand orchestral band performance. The program began with the hoisting of the national flag, followed by a parade featuring school Council members, NCC cadets, and Scouts & Guides. The cultural segment included an invocation dance, a choir performance, and group dances. The keynote address by Subedar Major Guruswamy emphasized the importance of freedom fighters and the need for students to take pride in India's heritage. The event was well-organized and successful.










# INDEPENDENCE DAY






















நம் பள்ளியில் சுதந்திர தின விழா ஆகஸ்ட் 15 அன்று மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் 8வது தமிழ்நாடு பெட்டாலியன் சுபேதார் மேஜர் திருM.குருசாமி அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். கடவுள் வாழ்த்திற்குப் பிறகு, விழாவின் தொடக்கமாக சுபேதார் மேஜர் திரு.M.குருசாமி அவர்கள் தேசியக்கொடி ஏற்றினார். மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் அனைவரும் வீரத்தியாகிகளை நினைவுகூர்ந்து வீரவணக்கம் செலுத்தினர். சிறப்பு விருந்தினர் அவர்கள் மாணவர்களின் அணிவகுப்பை ஏற்றுக்கொண்டார். அதன் தொடர்ச்சியாக தேச உணர்வூட்டும் மாணவர்களின் உரை, இசை மற்றும் நடனம் எனப் பல்வேறு கலைநிகழ்ச்சிகளை நிகழ்த்தி மாணவர்கள் தம் நாட்டுப்பற்றை வெளிப்படுத்தினர். சிறப்பு விருந்தினர் அவர்கள் பேசும் போது மாணவர்கள் நம் தேசத் தியாகிகளை என்றும் நினைவில் நிறுத்த வேண்டும் எனவும், அனைவரும் ஒற்றுமையுடன் வாழ வேண்டும் எனவும் உணர்வுப்பூர்வமாக உரையாற்றினார்.

# FIELD TRIP

A total of 244 students from Grades IX and XI participated in an educational field trip to the Anna Planetarium in Trichy on August 17, 2024. Fifteen teachers accompanied the students, ensuring their safety and supervision throughout the travel. The journey commenced at 8:50 AM, with the students travelling on six buses from the school campus. After a day filled with learning and excitement, they returned to the school at 8:00 PM. Upon the student's arrival, the parents received them. The field trip was a fun and enriching experience for everyone involved, leaving the students with both knowledge and enjoyable memories.



ஆகஸ்ட் 17 2024 அன்று நம் பள்ளியிலிருந்து 9 மற்றும் 11 ஆம் வகுப்பைச் சேர்ந்த 244 மாணவர்கள் மற்றும் 15 ஆசிரியர்கள் கல்விச் சுற்றுலாவாக திருச்சியில் உள்ள பிர்லா கோளரங்கத்திற்குச் சென்றிருந்தனர். மாணவர்கள் அறிவியல் தொடர்பான கண்காட்சி, முப்பரிமாண ஒளிப்படம் மற்றும் கோளரங்கம் ஆகியவற்றைக் கண்டு ரசித்தனர். பூக்காக்களில் ஆடல், பாடல் எனக் கல்விச் சுற்றுலா மிக இனிதாய் அமைந்தது.

# JHANKRITI

Jhankriti 2024 is a global forum celebrating art and culture, promoting cultural diversity and unity through artistic expression, as part of Art of Living's noble initiative. Dr GSK Memorial School students participated in Jhankriti 2024, showcasing their talents in various artistic genres. Their impressive performances earned them a place in the next level. Following event guidelines, students uploaded their YouTube performance videos for final selection. They are Master Lakshan Udhaya- Ghatam, Ms Ananya- Dance, Master Sivasankar- Instrumental, Master Sreeram-Violin, and Ms V. Sana- Dance. The students have qualified for the semi-finals of Jhankriti 2024, set for August 31st, 2024. Their achievements will showcase their dedication and artistic talent, enhancing the school's global reputation.



ஆகஸ்ட் 16 அன்று உலகளாவிய கலை மற்றும் கலாச்சாரக் குழுவான ஜன்க்ருதி இணையம் வழியிலான கலைப்போட்டிகளை நடத்தியது. இப்போட்டிகள் இணைய வழியில் மாணவர்கள் இணைந்து தம் கலை ஆர்வத்தைத் தணிக்க ஓர் சிறந்த தளமாக அமைந்தது. 26 மாணவர்கள் பாட்டு, நடனம், இசை எனப் பல்வேறு பிரிவுகளில் பல போட்டிகளில் கலந்து கொண்டனர். இவர்கள் இவர்கள் தம் திறமையினை இணையத்தில் பதிவேற்றம் செய்து இப்போட்டியில் பங்கேற்றனர். கடம் வாசித்தலில் செல்வன் லக்ஷன் உதயா, வயலின் வாசித்தலில் செல்வி அனன்யா, செல்வன் சிவசங்கர், செல்வன் ஸ்ரீராம் பரத நாட்டியத்தில் செல்வி.சனா ஆகியோர் முதல் சுற்றில் வெற்றி பெற்று ஆகஸ்ட் 31 அன்று நடைப்பெறும் இறுதிச் சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளனர் என்று கூறிக்கொள்வதில் நம் பள்ளி பெருமையடைகிறது.

# WORLD RECORD BY ARCHERY(GROUP RECORD)

On August 15, 2024, Master S.S. Vidhuran, a third-grade student from Dr GSK Memorial School, has set a new world record in archery as part of group achievement. In this event, he successfully shot 78 arrows while blindfolded within a time frame of 78 minutes. The Global World Record has formally acknowledged this remarkable achievement. The event, organized by Vijayan Sports, demonstrates Master Vidhuran's exceptional skills and dedication. His participation and achievements have brought immense pride to the school.




ஆகஸ்ட் 15 2024 அன்று குடந்தை பாணாதுறை பள்ளி மைதானத்தில் விஜயன் விளையாட்டு அகாடமி நடத்திய வில்வித்தைப் போட்டியில் நம் பள்ளி மாணவன் S.S விதுரன் (III) 78 நிமிடங்களில் 78 அம்புகளை எய்தி உலக சாதனை புரிந்துள்ளார். ஒருங்கிணைத்தல், ஊக்குவித்தல், திறன்மேம்படுத்துதல் ஆகியவற்றை முதன்மை நோக்கமாகக் கொண்டு இந்த விற்பயிற்சியை ஆர்வமுள்ள அனைத்து மாணவர்களுக்கும் நம் பள்ளியானது கற்றுக் கொடுத்து வருகிறது.

# DISTRICT LEVEL ARCHERY COMPETITION

On August 17, 2024, students of the Dr GSK Memorial School showcased their exceptional skills at the District Level Archery Competition held at Karthik Vidhyalaya School, Kumbakonam. F.Mohamedu Rayaan of Grade V C secured first place in the Under-12 category, demonstrating remarkable precision and skill. F.Hussainya of Grade VII A also clinched first place in the Under-14 category, reflecting her dedication and talent in archery. The outstanding performances of both students have brought pride and recognition to the school.







17.08.2024 கார்த்திக் வித்யாலயா பள்ளியில் நடைபெற்ற மாவட்ட அளவிலான வில்வித்தைப் போட்டியில் மாணவன் முகமது ரயான் V C U12 பிரிவில் முதலிடமும், மாணவன் ஹுசைன்யா VIIA U14 பிரிவில் முதலிடமும் பெற்று பள்ளிக்குப் பெருமை சேர்த்துள்ளனர். ஒருங்கிணைத்தல், ஊக்குவித்தல், திறன்மேம்படுத்துதல் ஆகியவற்றை முதன்மை நோக்கமாகக் கொண்டு இந்த விற்பயிற்சியை ஆர்வமுள்ள அனைத்து மாணவர்களுக்கும் நம் பள்ளியானது கற்றுக் கொடுத்து வருகிறது.

# INTERACT CLUB INSTALLATION

The Interact Club's Installation Ceremony for the academic year 2024-25 took place on August 20, 2024, at Dr GSK Memorial School. Rtn MPHF Esaiyasu, President of the Rotary Club in Kumbakonam, presided over the event along with other notable Rotary Club members. The ceremony proudly welcomed 50 newly inducted Interact Club members from Grades XI and XII. Teachers Ms Hemasri, Ms Anusha, Ms Ramya, and Ms Aburva coordinated the program. The chief guest, Rtn MPHF Esaiyarasu, emphatically emphasized the vital principles of leadership, community service, and the core values of the Interact Club. The ceremony concluded with gratitude from coordinators and participants, who expressed eagerness to continue the Interact Club's legacy of service and leadership.







K.M. Lakshidha
President



R. S. Srivathsan
Vice President



B. Jeevitha
Secretary



K. Arun prasath
Treasurer



V. Srinivasan
Sergeant of Arms



Diya Anbazhagan



Inas



S. Vikkash



V. Akshara

## Board of directors

ஆகஸ்ட் 20 நம் பள்ளியில் Interact club இடைவினை மன்றகம் மிகச் சிறப்பான முறையில் தொடங்கப்பட்டது.சிறப்பு விருந்தினராக Rotary club சுழற்சங்கத் தலைவர் திரு.இசையசு அவர்களுடன் பிற நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.துணை முதல்வர்கள் திரு.பரமகுரு, திரு.பாலாஜி அவர்கள் தலைமையில் நம் பள்ளியின் இடைவினை மன்ற தலைமை ஆசிரியர்களான திருமதி.ஹேமாஸ்ரீ, திருமதி அபூர்வா, திருமதி.அனுஷா, திருமதி.ரம்யா ஆகியோரின் வழிகாட்டுதலில் இவ்விழா சிறப்பாக அரங்கேறியது. விழாவின் பாரம்பரிய நிகழ்வாக இம்மன்றத்தின் கடந்த ஆண்டு செயலாளரான செல்வன் ஸ்ரீகிருஷ்ணா கடந்த ஆண்டுத் தலைவி செல்வி தனரக்ஷிதாவிற்கு தம் COLLAR ஐ அணிவித்து அதன் தொடர்ச்சியாக 2024 -25 செயலாளர் B. ஜீவிதாவிடம் CHARTER ஐ ஒப்படைத்தார். செல்வி தனரக்ஷிதா இந்த ஆண்டுத் தலைவியான செல்வி K.M.லக்ஷிதாவிற்கு XI B தம் COLLAR ஐ அணிவித்துப் பொறுப்புகளை ஒப்படைத்தார்.மேலும் துணைத்தலைவர் R.S.ஸ்ரீவத்சன்IX A, செயலாளர் B.ஜீவிதாXI B கருவூலப் பொறுப்பாளர் K.S.அருண் பிரசாத் XI A , வினைமுறை அலுவலர் V.ஸ்ரீனிவாசன் IX A மற்றும் சங்க உறுப்பினர்களான தியா அன்பழகன் XI A, S.விகாஷ் IX A, இனாஸ் IX A, V.அக்ஷராIX C ஆகியோருக்கு திரு.இசையசு,திருமதி ஹேமாஸ்ரீ மற்றும் மற்றும் சுழற்சங்க நிர்வாகிகள் இணைந்து அடையாள வில்லைகளை மாணவர்களுக்கு வழங்கி பெருமைப்படுத்தினர்.இதன் தொடர்ச்சியாக செயலாளர் செல்வி B.ஜீவிதா இந்த ஆண்டு நம் இடைவினை மன்றகம் நிகழ்த்தவிருக்கும் செயல்திட்ட அறிக்கையினை வாசித்தார்.திரு இசையசு அவர்கள் பேசும் போது நம் பள்ளி சிறப்பாகப் பணியாற்றி வருகிறதென்றும் அது மேலும் சிறக்க வேண்டும் எனவும் பாராட்டினார்.

# NATIONAL SPACE DAY QUIZ COMPETITION

As part of National Space Day on August 22, 2024, a Quiz Competition was organized at Dr GSK Memorial School following CBSE's instructions for students to engage with the activities outlined on the Bharat Moon Portal. Students from Grades 6 to 11 participated in the competition. The participants were quizzed on various topics, such as space technology, ISRO's Achievements, Adithya Mission, and Chandrayaan projects. Ms Priyadharshini, Ms Shanthi Kannan, and Ms Sivaranjani hosted the competition for Grades 6 to 8. Whereas, Mr.Uppilli, Ms Sivasakthi, and Mr Venugopal did for grades 9 & 11. Ms Kanchana Devi coordinated the program. The students enthusiastically participated in the quiz, showcasing their knowledge of space exploration and technology. Each round challenged their understanding of India's advancements in space and fostered excitement about space science.




ஆகஸ்ட் 22 நம் பள்ளியில் தேசிய விண்வெளி தினத்தை முன்னிட்டு இயற்பியல் துறைத்தலைவர் திருமதி காஞ்சனா தேவி அவர்களின் ஒருங்கிணைப்பில் வினாடி வினா போட்டிகள் 6,முதல் 8 ஒரு பிரிவாகவும் 9,11 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு மற்றொரு பிரிவாகவும் நடத்தப்பட்டன. 6 முதல் 8 ம் வகுப்பு வரை சுமார் 115 மாணவர்கள் முதல் சுற்றில் கலந்துகொண்டு அதில் 5 மாணவர்கள் வீதம் 5 குழுக்களாக தேர்ந்தெடுக்கப்பட்டு இறுதிச்சுற்று வரை நடத்தப் பட்டு அதில் ஒரு அணி தேர்ந்தெடுக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 9மற்றும் 11 ம் வகுப்புக்கு நடத்தப்பட்ட முதல் சுற்றில் 60 மாணவர்கள் பங்கேற்றனர். 5 மாணவர்கள் வீதம் 4 அணிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு இறுதிச்சுற்றில் ஒரு அணி தேர்ந்தெடுக்கப்பட்டது. இயற்பியல் துறை ஆசிரியர்களோடு திருமதி. உமா மற்றும் திருமதி .அபூர்வா ஆகியோரின் முயற்சியும் இவ்வினாடி வினா சிறப்பாக நடை பெற உதவியது.

# NATIONAL SPACE DAY
# JOURNEY OF CHANDRAYAAN

On August 23, 2024, Dr G. S. Kalyanasundaram Memorial School organized a workshop on the Chandrayaan mission as part of the National Space Day celebrations. The event, coordinated and hosted by the Physics department, educated Grades 8 and 9 students about India's space exploration efforts. The workshop included presentations, interactive discussions, and videos highlighting India's space technology achievements. The event was a success, inspiring students to pursue careers in space science and technology.

















ஆகஸ்ட் 23 நம் பள்ளியில் தேசிய விண்வெளி தினத்தை முன்னிட்டு இயற்பியல் துறை ஆசிரியர்கள் சந்திராயனின் பயணம் என்ற தலைப்பில் ஆசிரியர்களுக்கு ஒரு பயிற்சிப்பட்டறை நடத்தினர்.இதில் 8A, B, 9A, B மாணவர்கள் பார்வையாளராகப் பங்கேற்றனர். இயற்பியல் துறைத்தலைவர் திருமதி காஞ்சனாதேவி வரவேற்புரை வழங்கினார். திரு உப்பிலி மற்றும் செல்வி சந்தோஷி இருவரும் சந்திராயன்1,2,3 இவற்றின் பயணத்தையும் பயன்களையும் அழகாக மாணவர்களுக்கு விளக்கினர். திருமதி.சிவசக்தி அவர்களின் நன்றியுரையோடு பயிற்சி இனிதே நிறைவடைந்தது. இந்தத் தேசிய விண்வெளி தின நிகழ்வில் திரு.வேணுகோபால், திருமதி.ஷாந்தி கண்ணன், திருமதி பிரியதர்ஷினி, சிவரஞ்சனி முதலான துறை ஆசிரியர்களின் பணி அளப்பரியது.

# JANMASHTAMI CELEBRATION

Dr G. S. Kalyanasundaram Memorial School celebrated Krishna Janmashtami on August 23, 2024, with great devotion in the primary block. The event began with elementary students portraying Little Krishna and Radha, followed by a prayer by the school choir and a devotional Pooja. The Chief Guest, Ms Hema, inaugurated the event, and the Vice-principals, Mr Balaji and Mr Paramaguru, provided invaluable guidance. The event featured devotional songs, traditional Krishna Radhe dances, a Kolattam performance, and a dual performance of Krishna and Yasodha. The kids of LKG and UKG stole the show with their performance of "Uriyadi."




ஆகஸ்ட் 23 நம் பள்ளியில் கிருஷ்ண ஜெயந்தி விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இதில் KG முதல் 5 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்கள் கலந்து கொண்டனர்.கலைத்துறைஒருங்கிணைப்பாளர் திருமதி பவானி அவர்களின் வழிகாட்டுதலில் துணை முதல்வர்கள் திரு.பரமகுரு, திரு.பாலாஜி அவர்களின் தலைமையில் விழா மிகச் சிறப்பாகத் துவங்கியது.விழாவின் சிறப்பு விருந்தினராக திருமதி ஹேமா அவர்கள் கலந்துகொண்டார். இசைக்கலைஞர்களின் ஒருங்கிணைப்பில் கூட்டு வழிபாட்டுப்பாடலோடு துவங்கிய விழாவில் சிறப்புரை, நடனம் என மிகச் சிறப்பாக மாணவர்கள் தங்கள் திறன்களை வெளிப்படுத்தினர். நூறு மாணவர்கள் கிருஷ்ணன் ராதை வேடமணிந்து அணிவகுத்து வந்தது காணக் கண்கொள்ளா நிகழ்வானது. விழாவின் இறுதியாக கிருஷ்ணன் வேடமிட்ட குழந்தைகள் உறியடி நிகழ்வில் கலந்து கொண்டு விழாவை மேலும் மகிழ்ச்சியான தருணமாக மாற்றினர். பெருந்திரளான பெற்றோர்கள் கலந்துகொண்டு விழாவை மேன்மேலும் பெருமைப்படுத்தினர்.


Primary Block



Primary Block



Primary Block


Primary Block

Primary Block

Primary Block

Primary Block

Primary Block

Primary Block




# HERITAGE CLUB

The grand inauguration of the Heritage Club took place on 23 August 2024 at Dr. G. S. K. Memorial School. The distinguished Chief Guest, Mr. Andavar Kani, Treasurer of Chola Mandala Kalagham, inaugurated the Club. Mr C. Gajendran, Superintendent of Post Offices, Kumbakonam Division, was the guest of honour. The Chief Guest, Mr Kani, delivered a powerful address, underscoring the significance of safeguarding our cultural heritage. He lauded the participants for their proactive involvement, leaving all attendees with a profound admiration for one of India's architectural masterpieces. Earlier in the day, Mr Kani led an insightful Heritage Walk at the historic Iratheswarar Temple, Darasuram, a UNESCO World Heritage site attributed to Raja Raja Chola II. His captivating narration highlighted the temple's architectural splendour and deep historical significance, providing participants with an unforgettable learning experience.






# HERITAGE CLUB




ஆகஸ்ட் 23 அன்று நம் பள்ளியில் பண்பாட்டுக் குழுமம் மிகச் சிறப்பாகத் துவங்கப்பட்டது. திருமதி.அனுஷா அவர்களின் ஒருங்கிணைப்பில் செல்வி. மகேஸ்வரி, திருமதி.சுப்புலெஷ்மி போன்ற ஆசிரியர்களின் பொறுப்பில் இக்குழுமம் துவங்கப்பட்டது.துணை முதல்வர்கள் திரு .பரமகுரு, திரு பாலாஜி அவர்கள் தலைமையில் துறைத் தலைவர்களின் முன்னிலையில்விழா இனிதே துவங்கியது.இதன் தலைமை விருந்தினராக முகநூலில் சோழமண்டல வரலாற்றுத் தேடல் குழுவின் தலைவரான திரு. ஆண்டவர் கனி அவர்கள் கலந்துகொண்டார்.இவரின் தலைமையில் சுமார் 60 மாணவர்கள் தாராச்சுரம் ஐராவதீஸ்வரர் கோயிலுக்கு மரபுநடைப் பயணம் மேற்கொண்டனர்.இவர், மாணவர்களுக்கு சோழர்களின் பெருமையையும் கட்டிடக்கலையையும், நம் பாரம்பரியத்தை நாம் போற்றிக் காக்க வேண்டும் என்பதையும் அழகாக விளக்கினார்.இறுதியில் தேசிய கீதத்துடன் விழா இனிதே நிறைவடைந்தது

# SUPER SINGERS OF DR.GSK

The highly anticipated Super Singer Junior audition, organized by Vijay TV, was held on August 13, 2024, at Karthik Vidhyalaya School in Kumbakonam. Thirty-seven talented students from Dr. G.S.K Memorial School participated in the audition, showcasing their vocal abilities. Accompanied by their dedicated music teachers, Ms.Srividhya and Ms.Vidhyalakshmi, the students received guidance and support throughout the event. The audition provided an excellent platform for the students to showcase their musical talents on a larger stage. The school is immensely proud of their participation and eagerly anticipates their progress in this esteemed competition.




ஆகஸ்ட் 13 2024 அன்று குடந்தை கார்த்திக் வித்யாலயா பள்ளியில் விஜய் டிவி புகழ் சூப்பர் சிங்கர் குரல்வழித்தேர்வு நடைபெற்றது. தம் குரலால் உலகை வலம் வந்தவர்கள் பலர். அவ்வகையில் இக்குரல்வழித்தேர்வில் நம் பள்ளியிலிருந்து 37 மாணவர்கள் கலந்து கொண்டனர். இசையாசிரியர் திருமதி ஸ்ரீவித்யா அவர்கள் தலைமையில் மாணவர்கள் சிறப்பானதோர் அனுபவத்தைப் பெற்றனர்.

# DR.GSKIAN AT ZEE TAMIL SARE GA MA PA AUDITIONS

We are delighted to share that our talented student, Ms Hasini Ram of Grade X-A, has successfully cleared the 1st level audition of ZEE Tamil SAREGAMAPA Lil Champs - 4 held in Kumbakonam. She advanced to the 2nd level audition in Trichy on August 18, 2024, where she showcased her remarkable talent. We eagerly await the results and wish her continued success on this exciting musical journey!




குடந்தையில் ஸீ தமிழ் தொலைக்காட்சி நடத்திய 6 முதல் 14 வயதினருக்கான ச ரி க ம ப குரல் தேடல் இசைப்போட்டியில் நம் பள்ளி மாணவி செல்வி. ஹாசினி ராம் முதல் சுற்றில் வெற்றி பெற்று திருச்சியில் நடைப்பெற்ற இரண்டாம் சுற்றில் கலந்து கொண்டு போட்டி முடிவுகளுக்காகக் காத்திருக்கிறார்.

# BHAJAN

On August 2, 2024, we were delighted to resume the bhajan classes for our kindergarten students at Dr GSK Memorial School, a practice cherished by our school community. This initiative, recognized as one of the best practices of our school, has once again brought joy and cultural enrichment to our young learners.
The kids learned a range of bhajans under the direction of our passionate music tutors. There was a lot of spiritual melody and rhythm throughout the sessions.
Our Sanskrit teacher, Mr Venkatesh, has started teaching the children basic slokas as part of the programme. The focus is to familiarize young children with Sanskrit's rich language and cultural heritage.



ஜூலை 26 2024 முதல் நம் பள்ளியில் KG முதல் 2 ஆம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்குக், காலையில் இறைவழிபாட்டுக் கூட்டமானது நடத்தப்படுகிறது. இதில் நன்னெறியைக் கற்பிக்கும் அனைத்துப் பாடல்களும் இசைக்கப்படுகின்றன. இவ்வழிபாடானது மாணவர்களிடையே ஒழுக்கத்தையும் மேன்மையையும் வளர்க்கிறது.

# PRE PRIMARY ACTIVITIES

## GERMAN AND SANSKRIT



## READING & STORY CORNER






# VOCABULARY TREE



# PROUD ALUMNI



# SAFAL


Ms.Anusha. G


Ms.Sivagami Ganesh


Ms.Kamalapriya


Ms.Nirmal Bharathi P


Ms.Suganya K


Mr.Sethuraman S

# NCC


Mr.Venkat Kumar

# SPELL BEE


Ms.Nisha Murthy P
HOD


Ms.Ashwini S


Ms.Dharani Vignesh


Ms.Kavitha S G


Ms.Sivasankari B

# ART ACADEMY


Ms.Bhavani V


Ms.Srividhya S


Ms.Madhumitha


Ms. Hemalatha

# BOOK FAIR


Ms.Umamaheswari K
Librarian

# SMART HOUSE FOR ELDERLY PEOPLE


Ms.Kavitha S
HOD


Ms.Kamalapriya


Ms.Sivagami Ganesh


Ms.Nirmal Bharathi P


Ms.Suganya K


Mr.Sethuraman S

# THIRUKKURAL COMPETITION



Mr.Jayaraj S
DEAN



Ms.Rajalakshmi P
HOD



Ms.Meenakshi K



Ms.Mehala V



Ms.Chithra S



Ms.Mangayarkarasi N



Ms.Maheswari S



Ms.Vidhyalakshmi



Ms.Shalini A

# FIELD TRIP



Mr. Bala



Mr. Ayyappan R



Mr.Jayaraj S

# INTERACT CLUB



Ms.Anusha



Ms.Apoorva



Ms. Hemasri



Ms. Ramya

# NATIONAL SPACE DAY


Ms. Ushakumari
DEAN


Ms. Kanchana devi
HOD


Mr. Uppilli


Mr. Venugopal


Ms. Priyadharshini Ravi


Ms. Shanthi Kannan


Ms. Sivasakthi


Ms. Santoshi Modi


Ms. Sivaranjani

# HERITAGE CLUB


Mr. Ayyappan R


Ms. Subulakshmi


Ms. Maheswari

## Advisory team:



**Mr. Paramaguru,**
**Vice Principal**



**Mr. Balaji,**
**Vice Principal**

## Editorial Team :



**Mr. Jayaraj**
**Dean Language**



**Ms. Rajalakshmi**
**HOD Tamil**



**Mr. Babu**
**PGT English**



**Ms. Rekha**
**PGT English**

## Design :



**Ms.S G Kavitha**
**TGT English**



**Ms.Sivagami**
**PGT CS**



**Mr. Sethuraman**
**System Admin**

## Marketing & Branding :



**Ms.Anusha**
**CBSE coordinator**



**Ms.Jayalakshmi**
**PRO**

## Photography:



**Mr. Gopalakrishnan**
**Admin Staff**

**FOUNDED & MANAGED BY GKR FOUNDATION**